# சாகித்திய அகாடமி சார்பில் கிராமிய நிகழ்ச்சி



சாகித்திய அகாடமி சார்பில் மணவெளி ராதா ஆங்கில மேல்நிலைப்பள்ளியில் கிராமிய நிகழ்ச்சி நடந்தது.

---

புதுச்சேரி, ஜூன் 28: சாகித்திய அகாடமி சார்பில் மணவெளி ராதா ஆங்கில மேல்நிலைப்பள்ளியில் கிராமிய நிகழ்ச்சி நடத்தப்பட்டது. பள்ளியின் கருத்தரங்க கூடத்தில், படைப்பிலக்கியங்களில் நாட்டுப்புறவியல் எனும் தலைப்பில் கிராம நிகழ்ச்சியை சாகித்திய அகாடமி நடத்தியது. சாகித்திய அகாடமி பொதுக்குழு உறுப்பினர் பூபதி தலைமை தாங்கினார். மணவெளி கிராம பஞ்சாயத்து தலைவர் பரமானந்தம், ராதா ஆங்கில மேல்நிலைப்பள்ளி முதல்வர் பெர்லின் ஜெயக்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இந்நிகழ்ச்சியில் நாவல்கள் தொடர்பாக முனைவர் வேல்முருகன், துளிப்பா கவிதைகள் பற்றி புதுவை தமிழ்நெஞ்சன், குழந்தை பாடல்கள் என்ற தலைப்பில் முனைவர் நெய்தல் நாடன், சிறுவர் சிறுகதைகள் தொடர்பாக பாரதிவாணர் சிவா ஆகியோர் கருத்துகளை வழங்கினர்.

இதில் மணவெளி சுற்றுப்பகுதியை சேர்ந்த கிராம மக்கள், இலக்கியவாதிகள், புதுச்சேரி தமிழகத்தை சேர்ந்த படைப்பாளர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். சாகித்திய அகாடமியின் ஆலோசனை குழு உறுப்பினர் முனைவர் முருகையன் நன்றி கூறினார்.